NEWS18 தமிழ்நாடு

# பற்களை பிடுங்கி சித்ரவதை: பல்வீர் சிங் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு

Balveer Singh Case | ஐஏஎஸ் அதிகாரி அமுதா நடத்தும் 2-வது கட்ட விசாரணையில் 10 பேர் சாட்சியம் அளித்தனர்.


- NEWS18 TAMIL
- 1-MIN READ
- LAST UPDATED : APRIL 18, 2023, 07:52 IST
- TIRUNELVELI, INDIA


**நெல்லை அம்பாசமுத்திரத்தில் விசாரணைக் கைதிகளை காவல் நிலையத்தில் வைத்து பற்களை பிடுங்கி சித்திரவதை செய்த புகார் தொடர்பாக, ஐஏஎஸ் அதிகாரி அமுதா நடத்தும் 2-வது கட்ட விசாரணையில் 10 பேர் சாட்சியம் அளித்தனர். இந்த வழக்கு விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், ஏ.எஸ்.பி., பல்வீர் சிங் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.**

நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் சரகத்துக்கு உட்பட்ட காவல் நிலையங்களில் விசாரணைக் கைதிகளின் பற்களை கொடூரமாக பிடுங்கி சித்ரவதை செய்ததாக புகார் எழுந்தது. இதில் குற்றம்சாட்டப்பட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் பல்வீர் சிங் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த விவகாரம் குறித்து சார்-ஆட்சியர் விசாரணை நடத்துவதில் நம்பிக்கை இல்லை என பாதிக்கப்பட்டோர் தரப்பில் கூறினர்.

இதையடுத்து, சிறப்பு விசாரணை அதிகாரியாக அமுதா ஐ.ஏ.எஸ் நியமிக்கப்பட்டு, கடந்த 10ஆம் தேதி விசாரணையை தொடங்கினார். எனினும், அம்பாசமுத்திரம் காவல் நிலைய உதவி காவல் ஆய்வாளர் மகாலட்சுமி மற்றும் எழுத்தர் வின்செண்ட் ஆகியோர் மட்டுமே ஆஜராகினர்.

அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில், நேற்று தொடங்கிய இரண்டாம் கட்ட விசாரணையில், பாதிக்கப்பட்ட அருண்குமார், கணேசன் மற்றும் 2 சிறுவர்கள் உள்ளிட்ட 10 பேர் நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தனர். விசாரணைக்கு ஆஜரான முதியவர் பூதப்பாண்டி, தனது பேரன் சூர்யாவின் பற்களை உடைத்தது உண்மைதான் எனவும், பயத்தில் தனது பேரன் பிறழ் சாட்சியாக மாறியதாகவும் தெரிவித்தார். தனது பேரன் உட்பட பலரும் தன்னை சாட்சி சொல்ல வேண்டாம் என தடுத்ததாகவும், அதை மீறி வந்து வாக்குமூலம் அளித்ததாகவும் பூதப்பாண்டி குறிப்பிட்டார்.

இதே போல, மக்கள் கண்காணிப்பகத்தின் ஒருங்கிணைப்பாளர் ஹென்றி திபேனும் சிறப்பு விசாரணை அதிகாரியிடம் விளக்கம் அளித்தார். இந்த விவகாரம் தொடர்பாக, அவர் திரட்டிய தகவல்களை விசாரணை அதிகாரியிடம் வழங்கினார். பின்னர்

செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இந்நிலையில், ஏஎஸ்பி பல்வீர் சிங் மீது மரணத்தை விளைவிக்கும் வகையில் ஆயுதத்தால் தாக்குதல், சித்ரவதை செய்தல் உட்பட 3 பிரிவுகளின் கீழ், நெல்லை காவல்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

எனினும், அனைத்து குற்றங்களுக்கும் ஒரே FIR என்பது தவறானது என்றும் வெவ்வேறு காவல் நிலையங்களில் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதால் தனித்தனியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களின் வழக்கறிஞர் மகாராஜன் தெரிவித்தார்.

இந்நிலையில், நியூஸ் 18 தமிழ்நாடுக்கு பிரத்யேக பேட்டியளித்த வழக்கறிஞர் ஹென்றி திபேன், வழக்குப்பதிவு செய்யப்பட்டது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், கைது செய்யப்பட வேண்டும் என கூறினார். முதற்கட்ட விசாரணைக்கு சாட்சிகள் யாரும் ஆஜராகாத நிலையில், இரண்டாம் கட்ட விசாரணையில் பாதிக்கப்பட்டவர்களே நேரடியாக சாட்சியம் அளித்திருப்பதாலும், ஐபிஎஸ் அதிகாரி மீது வழக்குப்பதிவு செய்திருப்பதாலும் விசாரணை பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது

https://tamil.news18.com/tirunelveli/a-case-has-been-registered-against-asp-balveer-singh-944331.html